பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 13 வியாழக்கிழமை (27.06.2002) தொலைபேசி 3378 ஒலி 190

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

## விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலை கண்டித்தும் சமாதானத்தை வலியுறுத்தியும்

# ஊர்காவற்றுறை நோக்கி இன்று மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி

## அலைகடலெனத் திரளுமாறு மக்களுக்கு வெகுஜன அமைப்புகள் அழைப்பு

(அலுவலக நிருபர்)

**யாழ். தீவக வேலணைப் பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் செம்மணன், தயாளன் ஆகிய இருவரும் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், சமாதான விரோத சக்திகளுக் கெதிராகவும் இன்று யாழ் நகரில் இருந்து ஊர்காவற்றுறையை நோக்கி மாபெரும் மக்கள் எழுச்சி பேரணி நடைபெறவுள்ளது.**

**இம் மாபெரும் கண்டனப் பேரணியை யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.**

இன்று நடைபெறவுள்ள மாபெரும் கண்டனப்பேரணி தொடர்பாக யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் அளப்பரிய அர்ப்பணிப்புக்களின் மத்தியில் மலர்ந்துள்ள சமாதானச் சூழலைக் குழப்பி போரின் மூலம் சுயலாபம் தேடவிரும்பும் சக்திகளின் அக்கிரமங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து மக்களும் கிளர்ந்தெழுந்து இப்பேரணியில் கலந்து கொள்ள வேண்டும்.

இம் மாபெரும் எழுச்சிப் பேரணி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து இன்று [illegible]லை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

(02ம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் இளைஞர் மீது படையினர் இரகசிய விசாரணை

### உடன் நிறுத்துமாறு மேலவன் கோரிக்கை

(வவுனியா)

வன்னிப் பகுதியில் இருந்து செல்லும் தமிழ் இளைஞர்கள் வவுனியா, ஓமந்தைச் சோதனைச் சாவடிகளில் வைத்து இரகசியப் பொலிஸாரினால் படம் பிடிக்கப்படுவதுடன் இரகசிய விசாரணைகளும் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டுமென வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேலவன் இராணுவத் தளபதியிடம் கேட்டுள்ளார்.

வவுனியா, ஓமந்தைச் சோதனைச் சாவடி பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் விசாரணைக்குட்ளபடுத்தப்படுவதும், படம்பிடிக்கப்படுவதும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல் எனவும் வவுனியா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்னவிடம் மேலவன் தெரிவித்துள்ளார்.

(02ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காவலரண்களுக்கு அருகில் படையினர் அரண் அமைக்கின்றனர்

### கண்காணிப்புக்குழுவிடம் கேணல் தீபன் முறையீடு

(நமது நிருபர்)

யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் கிளாலி தொடக்கம் நாகர்கோயில் [illegible]

கேணல் தீபன் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவம் இத்தகைய நடவடிக்கைகளை [illegible] புக்குழுவிடம் தெரிவித்த முறைப்பாட்டில் படையினர் கிளாலியில் நான்கு காவலரண்களையும், முக [illegible]

## யாழ். பல்கலைக்கழக துடுப்பாட்ட அணி லண்டன் செல்லவுள்ளது

(வட்டுக்கோட்டை)

யாழ் பல்கலைக்கழக துடுப்பாட்ட அணியினைச் சேர்ந்த எட்டுப்பேர் அடங்கிய குழுவொன்று லண்டன் செல்லவுள்ளது.

லண்டனில் நடைபெறவுள்ள துடுப்பாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காகவே இக்குழுவினர் அங்கு செல்லவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் லண்டன் மாநகரில் நடைபெறவுள்ள துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்ளும் இவ்வீரர்கள் அங்கு 20 நாட்கள் தங்கியிருப்பர்.

லண்டன் செல்லும் பல்கலைக்கழக அணிக்கு சாஜகான் தலைமை தாங்கிச் செல்லவுள்ளார். (இ-216)

அடங்கிய குழுவொன்று லண்டன் செல்லவுள்ளது.

லண்டனில் நடைபெறவுள்ள துடுப்பாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காகவே இக்குழுவினர் அங்கு செல்லவுள்ளனர்.

துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்ளும் இவ்வீரர்கள் அங்கு 20 நாட்கள் தங்கியிருப்பர்.

லண்டன் செல்லும் பல்கலைக் கழக அணிக்கு சாஜகான் தலைமை தாங்கிச் செல்லவுள்ளார். (இ-216)

## கண்காணிப்புக்குழுவிடம் கேணல் தீபன் முறையீடு

(நமது நிருபர்)

யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன் படிக்கையை மீறும் வகையில் கிளாலி தொடக்கம் நாகர்கோயில் வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண்களுக்கு அருகாமையில் ஸ்ரீலங்கா இராணுவம் காவலரண்களை அமைப்பதாக விடுதலைப்புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் தீபன் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறித்து மூன்று தடவைகள் கேணல் தீபன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

மேமாதம் 21ந் திகதி கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்த முறைப்பாட்டில் படையினர் கிளாலியில் நான்கு காவலரண்களையும, முகமாலையில் மூன்று காவலரண்களையும் நாகர் கோயில் பகுதிகளில் இரண்டு காவலரண்களையும் அமைத்துள்ளதாகவும் யூன் மாதம் 6ந் திகதி தெரிவிக்கப்பட்ட முறைப்

(8ம் பக்கம் பார்க்க)

# மூதூரில் வன்முறை தொடர்கிறது

# 4 வீடுகள் அடித்து நொருக்கப்பட்டது

## ஊரடங்கு மேலும் நீடிப்பு

(மூதூர்)

மூதூர் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவங்களை அடுத்து நேற்று மூதூர் நகர்ப்புறத்தில் பத்திரிகையாளர் ஒருவரின் வீடு உட்பட நான்கு வீடுகள் முஸ்லிம் இளைஞர் குழுவொன்றினால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அங்கு மேலும் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

தாக்கப்பட்டுள்ள நான்கு வீடுகளில் இளைஞர் அபிவிருத்தி அலுவலகம், முன்னாள் ஆசிரியர் ஒப்பிலாமணி, பத்திரிகையாளர் சச்சிதானந்தன் ஆகியோரின் வீடுகளும் அடங்கும்.

இத்தாக்குதலின் போது ஒப்பிலாமணி என்பவர் பலத்த காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதலில் ஈடுபட்ட முஸ்லிம் குழுவினர் மூதூர் பகுதியில் உள்ள சாரதா இல்லத்திற்குச் சென்று அங்குள்ள மாணவர்களைப் பயமுறுத்தி அவர்களை வெளியேறுமாறு விரட்டியதுடன் அப்பகுதியில் உள்ள இரண்டு தேவாலயங்கள்

(02ம் பக்கம் பார்க்க)

# சுயாதீன ஆணைக்குழுவை நியமிக்க பிரதமர் சம்மதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன், மற்றும் அரசியல் பிரமுகர் தயாளன் ஆகிய இருவரும் வேலணையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் மூவரைக் கொண்ட சுயாதீன விசாரணைக் குழுவொன்று நாளைய தினத்திற்குள் நியமிக்கப்படவுள்ளது.

இச் சுயாதீன விசாரணைக்குழுவை நியமிப்பதற்கான அங்கீகாரத்தைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா வழங்கிய போதும் விசாரணைக்குழுவில் இடம்பெறவுள்ளவர்

(8ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை டிப்போவுக்குள் நுழைந்த

# இளைஞர் கோஷ்டி நடத்துநரை தாக்கியது

## பஸ்சேவை ஸ்தம்பிதம்

(துன்னாலை)

பருத்தித்துறை டிப்போவினுள் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு புகுந்த இளைஞர் கோஷ்டியினர் அங்கிருந்த பஸ் நடத்துநர் ஒருவரைத் தாக்கியுள்ளனர்.

பருத்தித்துறைச் சாலைக்கு சொந்தமான பஸ்ஸில் நேற்று முன்தினம் பகல் பிரயாணம் செய்த இளைஞர்களுக்கும் பஸ் நடத்துநருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினாலேயே பஸ் நடத்துநர இளைஞர் கோஷ்டியினரால் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

டிப்போவுக்குள் நுழைந்து தாக்கச் சென்ற இளைஞர் கோஷ்டியினரில் ஒருவரை டிப்போ ஊழியர்கள் மடக்கிப் பிடித்து நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(02ம் பக்கம் பார்க்க)

# வட - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்

# திட்டமிட்டபடி செப்ரம்பரில் நடக்கும் !

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் திட்டமிட்டபடி செப்ரம்பர் மாதம் 25ம் திகதி நடைபெறுமென பிரதித் தேர்தல் ஆணையாளர் ரி.அருந்தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத்தேர்தல் எந்தவொரு காரணத்திற்காகவும் இம்முறை பிற்போடப்படமாட்டாது எனவும் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி முடிவடைந்து விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்குக்கிழக்கில் 53 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பூம்புகார் வீதி, பாலையூற்று, திருகோணமலை என்னும் முகவரியைச்சேர்ந்த மதிஇன்பராசன் அன்னநேசன் என்பவருடைய திருமலைமாவட்ட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5605)

## தனியார் நிறுவனங்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தனியார் நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு படித்த, திறமையுள்ள நம்பிக்கைக்குரியவர்களை தமது வேலைவாய்ப்பு வங்கியில் இருந்து வழங்க முடியும் எனவும்,

இது விடயமாக தனியார் நிறுவனங்கள், சிவில் நிர்வாக அலுவலகம் 3ஆம் குறுக்குத்தெரு எனும் முகவரியுடனோ அல்லது 021-2001 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் சிவில்நிர்வாக அதிகாரி லெப். கேணல் எம்.ஜி ரத்நாயக்கா அறிவித்துள்ளார். (உ)

## இராசி பலன்

27- 06- 2002

(ஆனி 13, வியாழன்)

திருதியை பி. இ. 3. 58வரை
உத்தராடம் பி. ப. 12. 40 வரை
இராகுகாலம் 1. 25- 2. 55
நல்லநேரம் 7. 25- 8. 55

**மேடம்**
உடல்நலம், சென்ற இடத்தில் சிறப்பு, தனலாபம், தொழிற் சிறப்பு.

**இடபம்**
வியாபார நன்மை, போசன சுகம், தூரத்துச் செய்தி, உறவினர் சந்திப்பு.

**மிதுனம்**
காரியஅலைச்சல், இனசனக் கொண்டாட்டம், தெய்வ சிந்தை, போசன சுகம்.

**கடகம்**
உறவினர் சந்திப்பு, பணவிரயம், நித்திரைக் குழப்பம், நல்ல செய்தி.

**சிங்கம்**
சந்தோசமான நிகழ்வு, மனக்கட்டுப்பாடு, வீண் செலவு, திடீர் பயணம்.

**கன்னி**
தொழில் கஷ்டம், உடல் வியாதி, சத்துரு ஜெயம், தனலாபம்.

**துலாம்**
வாகன நன்மை, தூரப் பயணம், சென்ற இடத்தில் சிறப்பு, இனிய சம்பவம்.

**விருச்சிகம்**
வாக்கு மேன்மை, பணவிரயம், காரிய அலைச்சல், அதிகாரிகள் வெறுப்பு.

**தனுசு**
அந்நியர் உதவி, நல்லகாரியம், குடும்ப நன்மை, மதிப்புக் குறைவு.

**மகரம**
சகோதரர் உதவி, சொத்துக்களால் நன்மை, முயற்சி பலிதம், அதிக பிரயாசை.

**கும்பம்**
முயற்சி கைகூடும், பெரியோரால் நன்மை, தெய்வ சிந்தனை.

**மீனம்**
எடுத்த முயற்சி தாமதம், போசனசுகம், தாய்வழிஉறவு, நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# உலக வங்கிக் குழு உறுப்பினர்கள் நியாப் திட்டங்களை நேரில் பார்வை

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்களன்று யாழ்ப்பாணம் வந்துள்ள உலக வங்கிக் குழுவினர், இங்கு மேற்கொள்ளப்படும் நியாப் திட்டங்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

நிஷால் பெர்னாண்டோ, டாக்டர் ஜெ. சதீஸ், நியாப் திட்டப் பணிப்பளர் எஸ். ராமநாதன் ஆகியோரே திட்டங்களைப் பார்வையிட வந்தவர்களாவர்.

இவர்கள் பொறியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து நீர்ப்பாசன நிலைமையினை விருத்தி செய்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

அத்துடன், பொன்னாலைக்குளம், காரைநகர் உவர்நீர்த் தடுப்பணை என்பவற்றின் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டுள்ளனர். (உ-6,19)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த பாடசாலை மட்ட கல்வி அபிவிருத்திச் செயலமர்வு, தமிழ்த்தினப் போட்டி காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு யூலை மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

## வர்த்தகர்குழு இன்று வரமாட்டாது

(யாழ்ப்பாணம்)

வர்த்க நடவடிக்கைகளின் பொருட்டு இன்று யாழ்ப்பாணம் வரவிருந்த தென் பகுதியைச் சேர்ந்த 23 பேர் அடங்கிய வர்த்தகர் குழு, இன்று இடம்பெறும் கண்டனப் பேரணி காரணமாக தமது வருகையை ஒத்திவைத்துள்ளது.

யாழ்ப்பாணம் வரும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## கண்டனப் பேரணி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பனை தறிப்பிற்கு எதிராக நாளை நடைபெறவிருந்த கண்டனப் பேரணி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இதனை நடத்தும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (உ-5)

## போட்டிப் பரீட்சை

(நெல்லியடி)

மாகாண பொதுச்சேவையில் உள்ள சிற்றூழியர்களை எழுதுநர் சேவையின் வகுப்பு II 'ஆ' வுக்கு பதவி உயர்த்துஎதற்கானபோட்டிப் பரீட்சை எதிர்வரும் யூலை மாதம் 13, 14 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. (உ-247)

## மூதூரில் தாக்குதல் சம்பவம்

திருகோணமலை)

திருமலை மீன்பிடித்திணைக்களத்தில் வேலை செய்யும் மீன்பிடி உத்தியோகத்தர் ஒருவர், மூதூரில் ஆலஞ்சேனைக்குச் சென்ற போது இளைஞர் குழு ஒன்றினால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது, கனகசபாபதி சர்வேஸ்வரன் என்னும் வவுனியா வாசி ஒருவர் தலையில் பலத்த காயங்களுக்கு இலக்காகி திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து இவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட நவரத்தினம் (வயது-30 மூன்று பிள்ளைகளின் தந்தை)

இவர் சைக்கிளில் வரும் போது இராணுவ கவச வாகனத்துடன் மோதியதில் இரண்டு கால்களையும் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கண்டன பேரணிக்கு கூட்டுறவு ஊழியர் தொ.சங்கம்ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவகஅரசியல்பொறுப்பாளர் செம்மண்ணன்துணை அரசியல்பொறுப்பாளர் தயாளன் ஆகிய இருவரையும் வேலணையில் தாக்கிய சம்பவத்தைக் கண்டித்து இன்று நடைபெறும் கண்டனப்பேரணிக்கு கூட்டுறவுஊழியர் தொழில்சங்கம் தனதுபூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துசங்கம் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில்.

இன்றைய கண்டனப்பேரணியில் அனைத்து கூட்டுறவு ஊழியர்களையும் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ)

## வடமாகாண ப.தெ.வ.கூட்டுறவு சமாசம் கண்டனபேரணிக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வேலணையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்றுநடைபெறும் கண்டனப்பேரணிக்கு வடமாகாண பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின்சமாசம் தமதுபூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது

இதுகுறித்து நேற்றுஇடம் பெற்ற சமாசக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய இன்றைய கண்டனப்பேரணியில் சங்கங்கள் மற்றும் கொத்தணிகள் அனைத்தும் தமது கிளைக் காரியாலயங்களை மூடிபேரணியில் கலந்து கொள்ளவேண்டும் என்றும்

பனைஅழிப்புக்கு எதிராக நாளை நடத்தப்படஇருந்த பேரணி மறுஅறிவித்தல்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதென்றும் அறிவித்துள்ளது. (இ)

## பல்கலை அனுமதி இடைநிறுத்தப்பட்டோருக்கு இணைய வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இவ் வருடம் தெரிவு செய்யப்பட்டும், போதிய விபரங்களைச் சமர்ப்பிக்கத் தவறினர் என்ற காரணத்தினால் 23 பேரின் அனுமதிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இடைநிறுத்தப்பட்ட மாணவர்களை, உரியவிபரங்களை, யாழ். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு சமர்ப்பித்து அனுமதியை உறுதிப்படுத்துமாறு பதிவாளர் ந.தங்கராஜா கேட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்ட துறை ரீதியாக வருமாறு,

மருத்துவம்

ஜீ.கார்த்திக், ஜெ.ஜெயராஜ், எம்.ரமாஜினி, எஸ். தர்சனன், எம். சுதன்

விவசாயம்

ரீ.கலைமதி, பீ .ரொசீலி

முகாமைத்துவம்

எஸ்.சுதாநிதி, கலை

பீ.சிவகௌரி, ஐ.உமாநந்தினி, வீ. எஸ்.குமார், எஸ். மீரா, ,எஸ்.சிவசங்கர்,

பௌதிக விஞ்ஞானம்

ஜீ.குமணன், ஏ.பிரேமச்சந்திரா, ஆர். எழில்வேந்தன், எஸ்.ஜெயானந்தன், எஸ். ராகுலன், பீ.சௌதாமினி, பீ.நவரத்தினம்,

உயிரியல் விஞ்ஞானம்

கே. இராசலிங்கம், எம். தங்கராசா, எஸ்.விஸ்வலிங்கம், (உ-19)

### ஓமந்தையில்

இதேவேளை இந்நடவடிக்கையை நிறுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிடவில்லை எனவும், கடந்த கால அரசும் இதனைமேற்கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தவவுனியா மாவட்ட இராணுவத்தளபதி பாதுகாப்பமைச்சு இதனை நிறுத்துமாறுஉத்தரவிட்டால் அதனை அமுல்படுத்தத் தான்தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

### இளைஞர்

இதேவேளை டிப்போவினுள் புகுந்து பஸ் நடத்துனரைத் தாக்கியதைக் கண்டித்தும், பொலிஸாரிடம் ஒப்படைத்த இளைஞரை பொலிஸார் விசாரணைகள் எதுவுமின்றி விடுதலை செய்ததை ஆட்சேபித்தும் நேற்றுபருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் ஓட்டுனர்களும், நடத்துனர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

இதன் காரணமாக வடமராட்சிப்பகுதியிலிருந்துயாழ்ப்பாணம், மானிப்பாய், வட்டுக்கோட்டை, மற்றும் தென்மராட்சிக்கான சேவைகள்இடம் பெறாததால் பயணிகள் பெரும் அசௌகரியம் அடைந்தனர்.

பஸ்சுக்காக காத்திருந்த மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள், மற்றும் பொதுமக்கள் குறிப்பாக சீசன் ரிக்கற் பயணிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (இ- 41- 247- 43- 23)

## பாலகதிர்காமத்தில் குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான குடமுழுக்குப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் பகல் 11.18 மணி வரை உள்ள சுபநேரத்தில் நடைபெறும். (ந)

### ஊர்காவற்றுறை

அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியூடாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியைச் சென்றடைந்து அங்கு மாபெரும் கூட்டம் நடைபெறவுள்ளது.

சமாதானத்திற்கான உறுதிப்பாட்டை பேரணியூடாக வெளிப்படுத்தி நிரந்தர சமாதானத்தை வலியுறுத்த வேண்டும்.

இவ்வெழுச்சிப் பேரணியில் கலந்துகொள்ளும் அனைத்து மக்களும் இன்று காலை 10மணிக்கு முன்பாக துரையப்பா விளையாட்டரங்கத்திற்கு வருகை தருமாறும், பேரணியில் கலந்துகொள்ளும் மக்களின் வசதிக்காக வாகன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், மக்கள் அனைவரும் பிரதான வீதிகளுக்கு வருகைதந்து ஒழுங்கு செய்யப்பட்ட வாகனங்களில் துரையப்பா ஸ்ரேடியத்திற்கு வருகை தருமாறும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்பேரணியில் வர்த்தக சங்கம், மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை, கூட்டுறவுச் சங்கங்கள், மனிதநேய அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின்சமாசம், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் மற்றும் பல பொது அமைப்புகளும் கலந்து கொள்கின்றன.

இவ்வமைப்புக்களைசார்ந்த உரிமையாளர்கள் ஊழியர்கள் மற்றும் அரசஉத்தியோகத்தர்கள் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் மற்றும் அனைத்துஊழியர்களும் தங்களின் இன்றையபணிகளை நிறுத்தி இவ்வெழுச்சிப் பேரணியில் கலந்துகொள்ளுமாறும் வெகுஜனஅமைப்புக்களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது. (ம)

### மூதூரில்

மீதும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குப் பொலிஸார் விரைந்து சென்று தாக்குதல் நடத்திய கும்பல் மீது குண்டாந்தடிப் பிரயோகம்மேற்கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இதன்போதுஇரண்டு முஸ்லிம் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தை அடுத்து மக்கள் பாதுகாப்பானஇடங்களைநோக்கி இடம்பெயர்ந்து மெதடிஸ்ட் ஆலயத்தில் தஞ்சம்புகுந்துள்ளனர் தஞ்சம்புகுந்த மக்களை இரா.சம்பந்தன் எம்.பி எஸ்.துரைரட்ணசிங்கம் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை திருகோணமலையில் இருந்து இறக்கக்கண்டிநோக்கிச்சென்ற முஸ்லிம்இளைஞர் எஸ்.எம். நஸீர் என்பவர் தாக்கப்பட்டு அவரது மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டும் உள்ளது இந்தமுஸ்லிம் இளைஞர் படுகாயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ)

## திருட்டு

(புத்தூர்)

புத்தூர் சந்திப்பகுதி வர்த்தக நிலையம் ஒன்றில்50 ஆயிரம்ரூபா பெறுமதியான விற்பனைப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. (உ-253

# பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள; எழுச்சியுடன்செயற்பட வேண்டும்

### தனியார் துறையினரிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

பொருளாதார வீழ்ச்சியிலிருந்துநாடுமீள்வதற்கு, எழுச்சியுடன் முன்செல்ல இலங்கையின்தனியார்துறை ஆயத்தமாக வேண்டுமென்று ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க கேட்டுள்ளார்.

வர்த்தக சமூகப்பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

உலக மயப்பொருளாதாரத்திற்கேற்ப இலங்கையின் தனியார்துறை அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளவேண்டும்.

மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குதல், பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது, இலங்கையை தெற்காசியாவின் முதலீட்டு மையமாக்குதல் போன்றவை பற்றியும் ஜனாதிபதி இச் சந்திப்பில் ஆராய்ந்தார்.

1994 இல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அடிப்படை வசதிகள் இல்லாதிருந்தமையால் மின்சாரம், நெடுஞ்சாலைகள் தொலைபேசி, விமானநிலையம், துறைமுகம் போன்றவற்றின் பொருளாதார அடிப்படைவசதிகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தவேண்டி ஏற்பட்டதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## அடுத்த மாதம் முதல் மலர் ஏற்றுமதிக்கான பாதுகாப்பு வரி நீக்கம்

(கொழும்பு)

மலர்கள், மலர்ச்செடிகளின் ஏற்றுமதி சம்பந்தமாக விதிக்கப்படும் பாதுகாப்பு வரி அடுத்த மாதத்திலிருந்து நீக்கப்படுமென ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

அதிக அளவிலான மலர்களும், மலர்ச்செடிகளும் அன்னிடாமிற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மலர்கள், மலர்ச்செடிகள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ-9(

## கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் நிலவும் நீர்த்தட்டுப்பாடு விலகுமா?

(தென்மராட்சி)

கைதடி அரசினர் சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் நீர்த்தாங்கிக்கு தண்ணீரை இறைப்பதற்கு நீர் இறைக்கும் யந்திரம் இல்லாமையினால் வைத்தியசாலையில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இவ்வைத்தியசாலைக்கு ஒரு நீரிறைக்கும் யந்திரத்தினைப் பெறுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் முயற்சிகள் மேற்கொண்டும் இதுவரை எவ்வித பயனும் கிட்டவில்லை.

இதேவேளை வைத்தியசாலைக்கு ஒரு மின்பிறப்பாக்கியை வழங்க முடியாத நிலையுள்ளதாக ஆயுள்வேத வைத்தியத்திணைக்களம் கைவிரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-77)

## முதியோர் இல்ல பொறுப்பதிகாரி ஓய்வு

(தென்மராட்சி)

கைதடி முதியோர் இல்லத்தின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய திருமதி இ. துரைரத்தினம் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரின் இடத்துக்கு சமூக சேவைகள் அதிகாரியான கே.வி.சிவநேசன் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-77)

## கணனிப் பயிற்சி நிலையம் புதுக்குடியிருப்பில் திறப்பு

(கிளிநொச்சி)

லண்டன் சஸ்ரெய்ன் நிறுவன அனுசரணையுடன் தமிழீழ மாணவர் அமைப்பின் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த திங்களன்று புதுக்குடியிருப்பில் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் பொதுச்சுடரை ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

பயிற்சி நிலைய பெயர்ப் பலகையை புதுக்குடியிருப்பு கோட்ட கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் திரைநீக்கம் செய்துவைக்க பயிற்சி நிலைய மண்டபத்தை சஸ்ரெய்ன் நிறுவனப் பொறுப்பாளர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன. (உ-5)

## தென்மராட்சி கோட்டத்தில் 8 பாடசாலைகள் மட்டுமே இயங்கவில்லை

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்டத்தில் மொத்தமாகவுள்ள 59 பாடசாலைகளுள் தற்போது 51 பாடசாலைகள் அவற்றின் சொந்த இடங்களில் இயங்கி வருகின்றன.

இயற்றாளை அமெரிக்கமிசன் தமிழ் கலவன் பாடசாலை, எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் கரம்பகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஒட்டு வெளி அமெரிக்கமிசன் தமிழ் கலவன் பாடசாலை தனங்கிளப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மறவன்புலவு சகலகலாவல்லிவித்தியாலயம் மற்றும் சரசாலை சராஸ்வதி வித்தியாலயம் ஆகிய எட்டுப் பாடசாலைகள் அவற்றின் பழைய இடங்களில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் இப்போதும் வலிகாம், வடமராட்சிப் பிரதேசங்களிலேயே தங்கியுள்ளனர். (உ-77)

## தலைமை அலுவலகம் மீண்டும் சாவகச்சேரியில்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அதன் தலைமைப்பணியகத்தினை சாவகச்சேரி பிரதான வீதியில் உள்ள பிரதேச செயலகத்திற்கு அருகில் அண்மையில் ஆரம்பித்துள்ளது.

இச்சங்கத்தினால் முன்பு நடத்தப்பட்ட 22 கூட்டுறவுக்கள் விற்பனை நிலையங்களுள் 12 விற்பனை நிலையங்கள் மாத்திரமே தற்போது இயங்க ஆரம்பித்துள்ளன என சங்கத்தின் உபதலைவர் பெ.சின்னராசா தெரிவித்தார் (உ-77)

## பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் கடந்த வருடம் யூன் மாதம் 7ம் திகதி இடம்பெற்ற இ. உதயகுமார் என்பவரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சகோதரர்களான பூ.முருகநாதன், பூ. மகேந்திரன் ஆகியோர் யாழ். உயர் நீதிமன்றத்தினால் கடந்த வியாழனன்று 20 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (உ-6)

## அம்பாறையில் 74 முறைப்பாடுகள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு இதுவரை 74 முறைப்பாடுகள கிடைக்கப்பெற்றதாக குழுவின் தலைவர் சீன் மைக்கல் பெல்ற் தெரிவித்துள்ளார்.

இவற்றில் 71 முறைப்பாடுகளுக்குத்தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

இலங்கை அரசு அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள இராணுவ ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்குமுன்பாகஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றுஇடம் பெற்றுள்ளது.

புதிய இடதுசாரி முன்னணி மற்றும் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும்இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்க-இலங்கை ஒப்பந்தம் அமெரிக்கஇராணுவம் இலங்கையில்கால்பதிப்பதற்கு வழி கோலியுள்ளதாக புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரா குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## சாரணர் பாசறை விழா

(வட்டுக்கோட்டை)

22வது வருடாந்த சாரணர் பாசறை விழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 3தினங்கள் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி யில் இடம்பெறவுள்ளது.

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டில்இப்பாசறை விழா இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது. (உ-216)

## முதல்வர் சங்கத் தலைவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

முதல்வர் மற்றும் ஆணையாளர்க்கான வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இலங்கையில் உள்ள அனைத்து முதல்வர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் முதல்வர் சங்கத்திற்கான தலைவர் தெரிவும் இடம்பெறவுள்ளது. (உ-2)

## அழைப்புக் கடிதம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர்கலாசாலைக்கு இவ்வருடம் உள்ளீர்ப்புச் செய்யப் படவுள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர் மாணவர்களுக்கு இதுவரையில் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்படவில்லை.

இடவசதியை ஒழுங்கு செய்ததன் பின்னரே அழைப்புக் குறித்து அறிவிக்கப்படுமென ஆசிரிய கலாசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (உ-19)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயப்பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ)

## தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக ஏற்பட்ட தீ விபத்தில், கோண்டாவில் காரைக் கால் வீதியைச் சேர்ந்த ஆ. சுப்பிரமணியம் என்பவர் பலத்த எரிகாயங்களுடன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

### வன்னி சென்ற 740 குடும்பங்கள்

## தென்மராட்சியில் மீளக்குடியேற்றம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக இருவருடங்களுக்கு முன்னர் வன்னிக்குச் சென்ற 740 குடும்பங்கள் இதுவரை தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்துள்ளன.

இத்தகைய குடும்பங்கள் தமது மீள் வருகை பற்றி அவ்வப்பகுதி கிராமசேவையாளர்களிடம் பதிவு செய்து வருகின்றனர்.

இவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்குவது பற்றி இன்னமும் எத்தகைய முடிவுகளும் எடுக்கப்படவில்லைஎனத் தெரியவருகின்றது. (உ-77)

## ஆஸி. செனட்சபைத் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் சந்திப்பு

### புலிகளின் தடை நீக்கம் பற்றி எடுத்துரைப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியா செனட்சபைத் தலைவர் சென்றறி மாக்கி றெட் நீற் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ·சந்திரசேகரன் சந்தித்து உரையாடியுள்ளார்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது சர்வதேச சமூகம் விதித்துள்ள தடையை நீக்குவதற்கு அவுஸ்திரேலியா தனது பங்களிப்பை வழங்க வேண்டுமென இச் சந்திப்பின் போது சந்திரசேகரன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் அவுஸ்திரேலியபாராளுமன்றகட்டடத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முன்னெடுத்து வரும் சமாதான முயற்சி பூரண வெற்றியளிக்க வேண்டுமாயின், இலங்கையில் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## மட்டக்களப்பில் இரட்டைக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான்குளம் கிராமத்தில் இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து திரும்பியவரை மற்றொருவர் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார்.

இதனை அடுத்து ஊரவர்கள் கத்தியால் குத்திய வரை அடித்து கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை அணியிடம் நொதேண் அணி தோற்றது

(கொழும்பு)

இலங்கை அணிக்கும் நொதேண்பிராந்திய அணிக்குமிடையே நொதேண்ரேணில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

நொதேண் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 246ஓட்டங்களைப் பெற்றது.

இதில் என்லூயின் 123 ஓட்டங்களையும் டிசேசல்ஸ் 65 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணி 43 1 ஓவர்களில்249ஓட்டங்களைப்பெற்றது. றமேஸ் கலுவித்தாரண ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களையும் பெற்றனர். (உ-9)

## நியூசிலாந்து அணி 204ஓட்டங்களால் வெற்றி

(கொழும்பு)

நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம்நடைபெற்ற முதலாவது டெஸ்ட்கிரிக்கெட் போட்டியில்நியூசிலாந்துஅணி 204 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

நியூசிலாந்து அணி அதன் முதல் இனிங்ஸில் 337 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரீவன் பிளமிங் 130 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்கிந்திய தீவுகள் அணி அதன் முதல் இனிங்ஸில் 107 ஓட்டங்களைப் பெற்றது.

இதேவேளை நியூசிலாந்து அணி அதன் 2வதுஇனிங்ஸில் 243 ஓட்டங்களைப்பெற்றது.

நதன் அஸ்ஸில் 77 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்கிந்திய தீவுகள் அணி அதன் 2 வது இனிங்ஸில் 269 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிறைன்லாராஸ்ரெயின் ஆகியோர் தலா 73ஓட்டங்களைப் பெற்றனர். (உ-9)

## முதல் நாள் ஆட்டத்தில் ரட்ணம்ஸ் அணி வெற்றி

(சுண்டுக்குளி)

தென்னிலங்கையில் இருந்து சிநேகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு யாழ் வந்திருந்த கொழும்பு ரட்ணம்ஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணி, யாழில் இரு சிநேகபூர்வ ஆட்டங்களில் பங்கு கொண்டது.

சடந்த ஞாயிறு திங்கட் கிழமைகளில் யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் லீக்கின் தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் இவ்வாட்டங்கள் இடம்பெற்றன.

முதல் நாள்ஆட்டத்தில் ரட்ணம்ஸ்கழகஅணிநாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

வெற்றிக்கு வழி வகுத்த அந்த ஒரு கோல் ஆட்டம் தொடங்கி 10 வது நிமிடம் பெனால்டிஉதை மூலம்பெறப்பட்டது.

இவ் ஆட்டத்துக்குமத்தியஸ்தர்களாக ரி.றெட்சன், சி.ஏ. அரவிந்தன், கே. முத்துலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

இரண்டாவது ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டதனால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமமாக முடிவுற்றது.

ஆட்டம் தொடங்கி 15 வது நிமிடத்தில் ரட்ணம்ஸ் அணி வீரன் கமலஸ் ஒருகோலை போட்டார். அதன் பின் இரு அணிகளும் வெகு உற்சாகமாக விளையாடி மாறி மாறி எதிர்த்தரப்புகோல் பரப்பை ஆக்கிரமித்த போதிலும் கோல் எதையும் போடஇயலவில்லை.

இடைவேளையின் பின் 6வது நிமிடத்தில் பல்கலைக் கழக அணி வீரன் மகாவலிராஜா வெகுசாதுரியமாகஆடி தமது அணிக்கு ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.

பல்கலைக்கழக அணிகோல் காப்பாளர் ரி.அஜந்தன்வெகு சிறப்பாக பந்துகளை தடுத்து ரசிகர்களின் பாராட்டுதல்களைபெற்றார்.

இப்போட்டிகளை கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம்நெறிப்படுத்தினார்.

இரண்டாவது நாள் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக சி. நித்திலநாயகம், ரி. யூட்மன், கே. முத்துலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

எதிர் வரும் முதலாம்திகதி முதல்

## அறவழிப் போராட்டக் குழு சொந்த இடத்தில் இயங்கும்

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக்குழு எதிர்வருமமுதலாம் திகதி முதல் கைதடி நுணாவிலில் உள்ள அதன் புனரமைக்கப்பட்டசெயலகத்தில் செயல்பட ஆரம்பிக்கின்றது.

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்புகள் மற்றும் தேவைகள் பற்றிய மதிப்பீடுகளை முதற்கட்டமாக திரட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-77)

## கருங்குழவி கொட்டியவர் ஆபத்தான நிலையில்

(நெடுந்தீவு)

கூட்டில் இருந்து கலைந்த கருங்குழவிகள் கொட்டிய இளைஞர் ஒருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த அந்தோனி தங்கத்துரை என்பவரே இவ்வாறு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-258)

## அசோக சக்கரவர்த்தியின் வழியில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு

### இனச்சிக்கலைத் தீர்க்க இதுவேவழி என்கிறார் பிரதமர்

(பொலநறுவை)

யுத்தத்தினால் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது கருணை, சமாதானம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே எந்தவொருபிரச்சினைக்கும் தீர்வு காண முயல வேண்டுமென்று பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள சோமாவதி சைத்தியைத் திறந்து வைத்துப் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும்தெரிவிக்கையில் ;

சரித்திரப்பிரசித்தி வாய்ந்த சோமாவதிசைத்தி கடந்த காலத்தில் இடம்பெற்ற இனயுத்தம்காரணமாக தூர்ந்து போனநிலையில் காணப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை காரணமாகவே சோமாவதியைத் தரிசிக்க பௌத்த மக்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் தலதா மாளிகை உட்பட பௌத்த தலங்கள் தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காயின. மதத்தலைவர்கள் காட்டிய கருணையின்காரணமாக அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

சமாதான யாத்திரைவந்த அசோகச்சக்கரவர்த்தி எந்தப் பிரச்சினையையும் யுத்தத்தினால் தீர்க்கமுடியாது என்றும் அவற்றை சமாதானத்தினாலேயே தீர்க்கமுடியும் என்று செயலில்காட்டினார் என்றும் பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா குறிப்பிட்டார். (வ)

## அரசியல் பணிகள் தீவகத்தில் விரிவுபடும்

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதியில் இதுவரை செல்லாத இடங்களுக்கு அரசியல் பணிகளுக்காக விடுதலைப் புலிகள் விரைவில் செல்லவுள்ளனர்.

காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கே விரைவில் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த 17 ஆம் திகதி அல்லைப்பிட்டியூடாக தீவகம் சென்ற புலிகள் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் தமது அரசியல் பணிகளை ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## ஆனந்தசங்கரிக்கு வெள்ளியன்று வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்றஉறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியை வரவேற்கும் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு. ப 10 00 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (உ)

## மாணவர்களுக்கு வெளிநாடுகளில்மருத்துவம் மக்கள் வங்கி புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக் கிளையில் 10ஆயிரம் ரூபாவிற்கு மேல் இரண்டு வருடங்களுக்கு வைப்பாக வைத்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு வெளிநாடுகளுக்கு மருத்துவ வசதிகளின்பொருட்டுச் செல்வதற்கு உதவிசெய்யப்படவுள்ளது.

உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, கம்பர்மலைஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு மக்கள் வங்கி வல்வெட்டித்துறைக் கிளையின் பிரதி முகாமையாளரால் அண்மையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கான மறுமலர்ச்சிக் கணக்குத் திட்டம் (சிசுஉதான)மற்றும் திறமைச் சித்தியெய்தும் மாணவர்களுக்கான பரிசுத் திட்டம் என்பன குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. (உ)

### போதைப் பொருள்

## கடத்தியநபர் அகப்பட்டார்

(கொழும்பு)

7 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருளை இலங்கைக்குக் கடத்தி வந்த நபர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இந்த நபர் போதைப் பொருளை 62 சிறிய பைக்கற்றுகளில் அடைத்து அவற்றை விழுங்கி கடத்தி வந்துள்ளார்.

இந்தியா தூத்துக் குடியை சேர்ந்த இவரை நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஸ்கான் பரிசோதனைக் குட்படுத்திய போதே, வயிற்றுப் பகுதியில் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. (உ-9)

## காலாவதியான உணவுப் பொருட்கள் அழிப்பு

(சுதுமலை)

சுதுமலை, மானிப்பாய் மற்றும் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள் கடந்தவாரம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இப்பரிசோதனையின் போது, காலாவதியான பெருமளவு பிஸ்கட் பைக்கட்டுக்கள் அப்பளம், மாஜரீன், ஜாம் போன்ற பொருட்கள் விற்பனை செய்து வந்தமை கண்டுபிடிக்கப் பட்டது.

காலாவதியான மேற்படி பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டதுடன்,இனிஇவ்விதம் விற்பனை செய்தால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இப்பரிசோதனையில் ஆனைக்கோட்டைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் வி.தயாமோகன், மானிப்பாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பி. மனோகரன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். (உ-252)

## மட்டுவில் கத்தரி இனம் அழிவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரபல்யம் பெற்று விளங்கிய மட்டுவில் முட்டிக் கத்தரி இனம் தற்போது அழிந்து போயுள்ளதாக மட்டுவில் பகுதி விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் தென்மராட்சியில் ஏற்பட்ட இடம்பெயர்வினால் அழிந்து போயுள்ள இக்கத்தரி இனத்தின் விதையை மட்டுவில் பகுதி விவசாயிகளிடம் கூடப் பெற முடியாமல் உள்ளது.

இந்தக் கத்தரி இனத்துக்கு தமிழர் செறிந்து வாழும் வெளிநாடுகளில் கூட நல்ல வரவேற்பு இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ77)

## வன்னியில் இருந்து விதை நெல் பெறுவதற்கு ஏற்பாடு

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதை வகைகள்,உரவகைகள்மற்றும் கிருமிநாசினிகள் தாராளமாக இருப்பதாக நிலையப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் கால போகத்துக்குத் தேவையான விதை நெல்லை வன்னியில் இருந்து எடுத்து வந்து இந் நிலையமூடாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (உ-77)

### கிளி. மாவட்ட கூ. சங்கங்களின்

## கோடிக்கணக்கான சொத்துக்கள் இழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தகாலத்தில் இடம்பெற்ற பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அம் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் கோடிக்கணக்கான ரூபாபெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 18 கூட்டுறவுச்சங்கங்களுக்கு அவற்றின்சொத்துக்கு ஏற்பட்ட நட்டம் 500 மில்லியன் ரூபா என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இழப்பிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சோ, திணைக்களமோ எந்த விதமான இழப்பீடுகளையும் தரவில்லை என்று சங்கவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# இன்று ஒரு தகவல்

## நல்லதைக் கவனிக்கவே எப்பொழுதும் முயலுங்கள்

உலகம் ஒரு சண்ணாடியைப் போன்றது. நாம் நகைத்தால் அதுவும் நகைக்கும், நாம் முகம் சுளித்தால் அதுவும் முகஞ் சுளிக்கும். நனனெறி அதிக கரடுமுரடென்றாவது, அதிகக் கஷ்டமென்றாவது கூறப்படக் காணோம். கூறப்பட்டிருப்பதெல்லாம், அது குறுகியது என்றும் கண்டுபிடிக்கக் கடினமானது என்றுமே. மனம் சாந்தமாயும், சமாதானமாயும் இருக்கவேண்டுமானால் அதை அறிவுள்ள உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு நிரப்பவேண்டும். எல்லா விஷயங்களிலும் நல்ல அம்சத்தைக் கவனிக்கவே எப்பொழுதும் முயல். அனேகமாக ஒவ்வொரு விஷயத்திலும் நல்ல அம்சம் உண்டு.

யாரானாலும் 'ஆம்' என்று கூறிவிட இயலும். ஆனால் 'ஆம்' என்று சந்தோஷமாகக் கூற எல்லோராலும் முடியாது. 'இல்லை' என்று கூறுவதோ அதைவிடப் பன்மடங்கு அதிகக் கஷ்டமான காரியம். தனி நபர்கள் அடிக்கடி மறப்பதும் மன்னிப்பதும் உண்டு. ஆனால், சமூகங்கள் ஒரு பொழுதும்அவ்விதம் செய்யா. இலட்சியமில்லாத மனிதன் திசையறி கருவி இல்லாத கப்பலை யொப்பான். பிறரிடம் தாட்சண்யம் காட்டு உன்னிடம் மட்டும் தாட்சண்யம் காட்டாதே. ஊழியத்திலும் அனுதாபமே அதிக உதவி அளிப்பதாகும்.

மனோதைரியம் இழந்தாலன்றி எவரையும் எந்தக் காலத்தும் உண்மையிலேயே தோற்கடிக்கப்பட்டான் என்று கூற இயலாது. சோம்பல் இளைப்பாறுதல் அன்று. அது வேலையைவிட அதிகம் களைப்பை அளிப்பதாகும். ஒன்றுஞ் செய்யாதிருந்தால் இளைப்பாறக் கஷ்டமாகும். வீரம் என்பது அபாயத்தை அலட்சியம் செய்வதன்று. அதைத் தைரியமாகத் துணிந்து எதிர்ப்பதாகும். ஜனங்கள் இறந்தோரைப் பேசுவது போலவே இருப்போரையும் பேசுவார்களானால் எவ்வளவு நன்மையாகவிருக்கும். சண்டைக்கு இருவர் தேவை. நீங்கள் அவ்விருவரில் ஒருவராயிருக்காதீர்கள். செய்யவேண்டியதைச் செய்ய முயலுங்கள். முயன்றால் செய்யவேண்டியது இதுவென்பதில் சந்தேகம் ஏற்படாது.

நம்பிக்கை பூரணமாக இருக்கவேண்டும். ஆனால் அது குருட்டுத் தனமாய் இருக்கக்கூடாது. இன்பங்களைப் பெறமுயல்வதிலும், இலட்சியங்களைப் பெருக்க முயல்வதே நலம். எந்தக் காரியமும் தவறாயிருப்பதால் நம்மை இழிவாக்கிவிடுவதில்லை. இழிவாக்குவதாலேயே தவறாய் விடுகின்றது. அனேக சந்தர்ப்பங்கள் நாம் தீமையென்று கூறுவது, தவறியோ அல்லதுமிதமிஞ்சியோ ஏற்பட்ட நன்மையாகும். மனோதைரியம் மிதமிஞ்சினால் மடமையாகும். பட்சம் மிதமிஞ்சினால் பலவீனமாகும்.

அதிகச் சொத்தோடு பிறப்பதில் பெருமை பேசிக்கொள்வதற்கு யாதொன்றும் இல்லாதது போலவே, சாமர்த்தியத்தோடு பிறப்பதிலும் பெருமை பேசிக்கொள்வதற்கு யாதொன்றும் கிடையாது. சொத்தும் சரி, சாமர்த்தியமும் சரி நன்றாய் உபயோகிக்கப்பட்டால் மட்டுமே பெருமை தரும். எவ்வளவு பெருமை வாய்ந்ததாயினும் சரி, வீரச்செயல் எதையும் விடத் துன்பத்தைச் சகித்துக் கொள்ளும் சக்தியே மனிதனுடைய உயர் குணத்திற்குரிய சிறந்த சோதனையாகும். தன்னைப் பூரணமாக்கிக் கொள்ள அதிகமாக முயற்சி எடுத்துக் கொள்பவனே உயர்ந்தவன். தான் பூரணமாய் விட்டதை அதிகமாக உணர்பவனே ஆனந்த புருஷன், எந்தக்காலத்திலும்புயற்காற்றினாலும் பூமியதிர்ச்சியினாலும் அழிந்தவற்றைவிட, வீடுகளும் நகரங்களும் மனிதர்கள் கைகளினாலேயே அதிகமாக நாசம் அடைந்திருக்கின்றன. குற்றங்கள் பிறக்கும் இடங்களில்முக்கியமானவை குடியும், அறியாமையுமே, தீயொழுக்கத்திற்குக்கட்டுப்பாடில்லை என்று நினைப்பது தவறு, தீயவனே எஜமானர்கள். அனைவரிலும் கொடிய எஜமானனுக்கு அடிமையாயிருக்கிறான். அக்கொடிய எஜமான் யார்? அவனுடைய சொந்தத் தீய உணர்ச்சிகளே,

ரோஜாச் செடியில் முள் இருக்கிறதெனமுறையிடாதே முட்செடியில் மலர் உள்ளதென்று மகிழ்வாயாக. உண்மையானசெல்வம் நாம்எதையுடையோம்என்பதில்அன்று, நாம்எதுவாய் இருக்கிறோம் என்பதிலேயே அடங்கும். கற்பது கடினம். ஆனால்அதைவிடக் கடினம் கற்பதை மறப்பது, அதிகம்கற்றவரே தமக்கு எவ்வளவு அற்பமாகத் தெரியும் என்று நன்கு அறிந்து கொள்ளக் கூடியவராவர். இரவில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அநேக சமயங்களில் பொழுதுவிடிந்ததும் எல்லாம் சரிப்பட்டுப்போகும். கல்வி எதற்காக? மனிதனை நல்ல தொழிலாளி ஆக்குவதற்கே, தவறு செய்துவிட்டோம் என்று தெரிந்ததும் அதைஒப்புக் கொள்ளஒருநாளும்வெட்கப்படாதே. ஒருபொழுதும் தவறுசெய்யாதவன் ஒன்றும் செய்யாதவன் ஆவான்.

வறிஞர் என்பவர் கொஞ்சமாக உடையார் அல்லர் மிகு பொருள் விரும்புபவரே வறிஞர் ஆவார். செல்வம் சன்மார்க்கத்தில் அடையப்படுவதில்லை என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். அதேமாதிரி வறுமையும் சன்மார்க்கத்தில் அடையப்படுவது அபூர்வம் என்பதே, மனிதனைப் பூரணமாக்கவேண்டிய குணங்கள் எவை? கலங்கா அறிவு, அன்பு நிறைந்த நெஞ்சு, நீதியான தீர்மானம், ஆரோக்கியமான உடல். கலங்கா அறிவின்றேல் அவசரமாய் முடிவு செய்துவிடுவோம். அன்பு நிறைந்த நெஞ்சின்றேல் சுயநலமுள்ளவராயிருப்போம். நல்லஎண்ணம் இருப்பினும் நீதியான தீர்மானமின்றேல் நன்மையுண்டாவதிலும் தீமையே உண்டாகும். உடற்சுகமின்றேல் ஒன்றும் செய்ய முடியாது. உண்மையில் பெருங்கடல் நம்மால்அறியப்படாமல் பரந்து கிடக்கின்றது. நாமோகடற்கரையில் விளையாடி, அங்குமிங்கும் ஓடி, அழகான சிப்பிகளையும் மெல்லிய கடற்பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தைகளைப்போல் இருக்கின்றோம்.

ஆவ்பரி

# மீள ஆரம்பித்த பாடசாலைகளில்

# தளபாடங்கள் பற்றாக்குறை

(தென்மராட்சி)

தென்மராட்சிகல்விக்கோட்டத்தில் மீளவும் ஆரம்பித்துள்ள பாடசாலைகளுள் பெரும்பாலானவற்றுக்கு மாணவர்களுக்கான தளபாட வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

இதன் காரணமாக இம் மாணவர்கள் பெரும் சிரமங்களுடனேயே தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

2000ஆம் ஆண்டுமே மாதத்தில் இடம் பெற்ற இடம் பெயர்வினைஅடுத்து பல பாடசாலைகளின் தளபாடங்கள் சேதமடைந்தும் காணாமலும் போய்விட்டன.

சேதமடைந்த நிலையில் இருக்கும் தளபாடங்களை மீளவும் திருத்தம் செய்வதற்கு நிதியில்லாமையினால் அவ்வப் பாடசாலை அதிபர்கள் நிலைமையைச் சரிக்கட்ட பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதே வேளை, பாடசாலைகளில் சேதமடைந்த தளபாடங்களைத் திருத்துவதற்கு கல்வித்திணைக்களம் நிதி வழங்க முடியாத நிலையில் இருப்பது பற்றியும் அதிபர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (உ-77)

## அதிகரித்த விலையில் நிவாரணப் பொருட்கள்

(காரைநகர்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது நிவாரணத்திற்கு வழங்கப்படும் பொருட்களின் விலைகள் தனியார் கடைகளிலும் பார்க்க அதிகமாக வுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் கடைகளில் சில்லறைக்கு 35 ரூபா விற்கு விற்கப்படும் சீனி, ப.நோ.கூ.சங்கத்தில் 36.75 சதமாக விலையிடப்பட்டுள்ளது.

அதே வேளை தனியார் கடைகளில் அரிசி 28 ரூபா தொடக்கம்36 ரூபா வரை விற்கப்படுகிறது. ஆனால் காரை ப.நோ.கூ. சங்கத்தில் 37.75 விலையிடப்பட்டே நிவாரணத்திற்கு விநியோகிக்கப்படுகின்றது.

இவ்வாறான விலை அதிகரிப்பு வேறு சில சில்லறைப் பொருட்களிலும் காணப்படுவதாக பாவனையாளர் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-246)

## மரம் தறிப்பதைத் தடுக்க கிராமிய மட்டத்தில் விழிப்புக்குழுக்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் சட்டவிரோதமாக மரம் தறிப்பவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கு உதவும் பொருட்டு கிராமிய மட்டத்தில் விழிப்புக்குழுக்களை அமைப்பது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலர் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

சட்டவிரோதமாக மரம் தறிக்கும் செயலில் ஈடுபடுபவர்கள் அவற்றினை இரவு வேளைகளிலேயே லாண்ட்மாஸ்டர்களில் கடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## புற்று நோய்க்கு எதிரான பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமுதாயத்துறை மாணவர்களினால் புற்று நோய்க்கெதிரான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், சமுதாயத் துறை மாணவர்கள் சுகமஞ்சரி இதழுடன் புற்று நோய் விழிப்புணர்வு சம்பந்தமான கையடக்க நூல் ஒன்றையும் பாடசாலை மட்டங்களில்இலவசமாக விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-19)

## கண்டி வன்முறை சந்தேக நபர்கள் மீது வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகளில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டதாக தெரிய வந்துள்ளதைத் தொடர்ந்தே அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இவர்கள் தொடர்பாக விசாரணை நடத்திவருவதுடன், சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெறப்படவுள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மற்றும் அவரது இருபுதல்வர்களினது வழிகாட்டலின் பேரில் சில குழுக்கள் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி உடத்தலவின்ன 10 முஸ்லிம்கள்படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக இவர்கள் விசாரணை செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மடுத்திருத்தல யாத்திரிகர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் அறிவுறுத்தல்

(மன்னார்)

மருதமடுத்திருத்தல வருடாந்த உற்சவம் வழமை போல் ஆடி, ஆவணி மாதங்களில் ஒன்பது நாள் ஆயத்த நவநாட்களுடன் நடைபெறவுள்ளதையொட்டி திருத்தல யாத்திரிகர்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்களை மன்னார் மறை மாவட்ட ஆயர் முன் வைத்துள்ளார்.

● திருவிழாவிற்கு வருகை தரும் யாத்திரிகர்கள் மடுறோட் சந்தியிலிருந்து மடுத் திருத்தலம் வரையுள்ள வழமையான பாதையினை ஆனி 20ஆம்திகதி முதல் ஆடி 04 ஆம் திகதி வரை ஆடித் திருவிழாவிற்கும், ஆவணி 04 ஆம் திகதி முதல் ஆவணி 19 ஆம் திகதி வரை ஆவணித் திருவிழாவிற்கும் பயன்படுத்திப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

● திருத்தலத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் தத்தமது அடையாள அட்டையினை தம்முடன் வைத்திருக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றார்கள்.

● வாகனத்தில் பயணம் செய்பவர்கள் மடுறோட் சோதனை நிலைய வசதிகருதி வாகன விபரங்களையும் பயணிகளின் பெயர், அடையாள அடை இலக்கம் என்பனவற்றைக் கொண்ட பட்டியலையும் தயாரித்து தம்முடன் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

● இப்பாதை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இக்காலத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கும். திருவிழாவுக்கு அண்மித்த நாட்களில் மடுறோட் சோதன்ன நிலையம் மூடும் நேரம் நீடிக்கப்படக்கூடும்.

● யாத்திரிகர்கள் தமது நாளந்தப் பாவனைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை மட்டும் தம்முடன் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

● வியாபாரப் பொருட்கள் எதுவாயினும் இப்பாதை வழியாக அனுமதிக்கப்பட மாட்டாது எனவே, அப்பொருட்களைக் கொண்டு வருபவர்கள் வழமைபோல் உயிலங்குளம் பாதை ஊடாகக் கொண்டு வரவேண்டும்.

● திருத்தலப்பகுதியில் மதுபான வகைகள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றை மடுத்திருப்பதிக்குள் எடுத்துவரக்கூடாது. (உ)

## இன்று தேர்

(ஏழாலை)

மல்லாகம் கோட்டைக்காடு அருள்மிகு சாளையம்பதி முருகன் கோவில்தேர், தீர்த்த உற்சவங்கள் முறைபே இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன. (உ-206)

## ஆரம்பசுகாதார வைத்திய நிலையம் மீள இயங்கும்

(தென்மராட்சி)

மந்துவிலில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தினை மீளவும் அதே இடத்தில் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந் நிலையத்தில் முன்பு இருந்த தளபாடங்கள் யாவும் காணாமல் போய்விட்டதால், தளபாடங்கள் வாங்க வேண்டிய தேவை இருப்பதாகவும் அப்பகுதி கிராமசேவையாளர் தெரிவித்துளளார். (உ-77)

# பயங்கரவாதத்திற்கு அடிபணியாத புதிய தலைவரைப் பலஸ்தீனம்தெரிவு செய்ய வேண்டும்

## மத்திய கிழக்கிற்கான கொள்கை உரையில் புஷ்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தனி நாடு உருவாகுவதற்கு பலஸ்தீனர்கள் புதிய தலைவர் ஒருவரை தெரிவுசெய்யவேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதிஜோர்ச் புஷ் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கிற்கான கொள்கை உரையின் போது இதனை தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் பலஸ்தீனதனிநாடு உருவாகுவதற்கும் பலஸ்தீன மக்கள் பயங்கரவாதத்திற்கு அடிபணியாத புதிய தலைவர் ஒருவரை தெரிவு செய்யவேண்டும்.

இதேவேளை பலஸ்தீனத் தனி நாடு பயங்கரவாதத்தால் அன்றி சீரமைப்பு நடவடிக்கைகள் மூலமே உருவாக்க முடியும்.

பலஸ்தீன மக்களுக்கு புதிய தலைமைத்துவம் ஏற்பட்டு அண்டை நாடுகளுடன் புதிய பாதுகாப்பு நடைமுறைகள் கடைப்பிடிக்குமிடத்து பலஸ்தீன தனிநாடு உருவாக அமெரிக்கா உதவி வழங்கும்.

குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் 18 மாதங்களில்மாகாணரீதியான பலஸ்தீன நாடு உருவாகமுடியும். 3வருடகாலத்தில் அது நிரந்தர பலஸ்தீன நாடாக மாறும் என்றுகுறிப்பிட்டார்.

எனினும், தெரிவு செய்ய வேண்டிய புதிய பலஸ்தீனத் தலைவர் யார் என்பதை புஷ் தனது உரையில் பூடகமாக வேனும் குறிப்பிடவில்லை. (உ-9)

## வெங்காயச் செய்கையில் நாட்டம்

(புத்தூர்)

புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதி விவசாயிகள் வெங்காயச்செய்கையில் நாட்டம் காட்டிவருகின்றனர்.

தரைவழிப் பாதை யூடாக தென்பகுதிக்கு வெங்காயம் எடுத்துச் செல்லப்பட்டு நல்ல விலைக்கு விற்கப்பட்டு வருவதையடுத்தே வெங்காயச் செய்கையில் விவசாயிகள் நாட்டம் காட்ட ஆரம்பித்துள்ளனர். (உ-235)

# பயங்கரவாதத்திற்கு எதிரான இரு ஒப்பந்தங்களில் புஷ் கைச்சாத்து

(வாஷிங்டன்)

பயங்சரவாதத்திற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள வகை செய்யும் இரண்டு ஒப்பந்தங்களில் ஐக்கிய நாடுகள் சபையுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் கைச்சாத்திட்டுள்ளார்.

இவ் உடன் படிக்கைசளில் முக்கியமாக, பயங்கரவாதிகளினால் நடத்தப்படும் குண்டுத் தாக்குதல்கள், கொலைக் குற்றச் செயல்களாகவே கருத வேண்டும்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை நாடுகடத்த, நாடுகள்யாவும் முன்வர வேண்டும். யற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி சேகரிக்கும் செயல் கடும் குற்றமாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் 1998 ஜனவரி மாதத்தில் பயங்கரவாத குண்டு வீச்சுத் தாக்குதல்கள் முற்றாக அடக்கி ஒடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தும் ஒப்பந்தத்திலும்,

2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேசரிக்கும் முயற்சிகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தும் உடன் படிக்கையிலும் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு

### பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளின் மீதான தடை உடனடியாக நீக்கப்பட்டு அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தைநடத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பௌஸி அரசை வற்புறுத்தியுள்ளார்.

ஜோன்அமரதுங்கா, ரவி கருணநாயக்கா ஆகிய இரு அமைச்சர்களது செயற்பாடுகள்மக்களைப்பாதிப்பதினால் அவர்கள் மீது கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கைஇல்லாத் தீர்மானத்துக்கு எனது முழுமையான ஆதரவையும் வழங்கவுள்ளேன். அமைச்சர்கள் இருவர் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தொடர்பாககட்சியெடுத்தமுடிவிற்குத் தான் கட்டுப்படுவதாகவும் பௌஸி தெரிவித்துள்ளார். (வ)

## கலாமின் மனம் மாற்றிய காந்தியின் பாதயாத்திரை

(புதுடில்லி)

தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளரும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம்தன் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்திய சம்பவம் அது என்பதை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

1947 ஆம் ஆண்டு 14ஆம் திகதிஉயர்நிலை பள்ளியின் மாணவத் தலைவனாக நான் விளங்கியகாலத்தில் ஆசிரியர் என்னை அழைத்து ''இன்று நள்ளிரவு நமக்கு சுதந்திரம கிடைக்கப் போகிறது'' எல்லோரையும் அழைத்து பள்ளிக்கு வந்துவிடு என்றார்.

அன்று இரவு அன்றைய பாரத பிரதமர்நேரு தேசியக் கொடியைஏற்றி, இந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசினார். ஆனால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை காரண்ம், நான் தமிழ்மொழியை மட்டும் அறிந்திருந்தேன்.

அடுத்த நாள் பத்திரிகைகளில் இரு பாடங்கள்பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஒன்றுபிரதமர் நேரு தேசியக் கொடியை ஏற்றுவது மற்றையது மதக் கலவரத்தில்ஈடுபட்டிருந்தவர்களை சமாதானப்படுத்த நவகாளிவீதியில் செருப்புக் கூட இல்லாமல் மகாத்மாகாந்தி நடந்து செல்லும் காட்சி.

அந்தப்படம் தான் என் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கலாம் தெரிவித்துள்ளார். (உ-8)

## இந்தியநடவடிக்கை குறித்து அமெரிக்கா திருப்தி

(வாஷிங்டன்)

போர்ப்பதற்றத்தை தணிக்கும் வகையில் இந்தியா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் உறுதியானதும் திருப்தி அளிக்கும் வகையிலும் அமைந்திருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை செயலாளர் றொனால்ட்றெண்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்ற அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலாளர், இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சரைச் சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நட்புறவுடனேயே தான் விஜயம் மேற்கொள்வதாகவும், இரு நாடுகளுக்கு மிடையே மத்தியஸ்தம் செய்யும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் கூறிய அவர், இந்தியா, பாகஸ்தான் எல்லையில் பீரங்கித் தாக்குதல்கள் குறைந்திருப்பதாகவும்,

எல்லையில் பதற்றம்குறைந்திருப்பதாகவும் ஆனாலும் இரண்டு நாடுகளுக்குமிடையே நிலவிவரும் போர் அபாயம் முற்றிலும் நீங்கவில்லை என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## ஜம்முகாஷ்மீரில் புதிய தீவிரவாத இயக்கம்

(புதுடில்லி)

ஜம்முகஷ்மீர் மாநிலத்தில் புதிய தீவிரவாத இயக்கம் ஒன்று உருவாகியிருப்பதாக இந்திய உளவுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அல்லாமுஜாதீன் இயக்கத்திலிருந்து பிரிந்தவர்களே இவ்வியக்கத்தை உருவாக்கியுள்ளதாகவும், இவர்களே அண்மையில் காஷ்மீர் பகுதிகளில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்கு காரணமானவர்கள் என்றும் உளவுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அல்மதீனா என்ற பெயரைக் கொண்ட இந்தப் புதிய இயக்கம் தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்வதற்காக பொதுமக்களிடையே பதற்றத்தை தூண்டிவிட முயல்வதாசவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-9)

# ஊழியர் சேமலாப நிதிபற்றிய உத்தியோகபூர்வ அறிக்கை

### வெளியிடுமாறு தொழில் அமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் இன்றைய நிலைபற்றி உத்தியோக பூர்வமான அறிக்கையொன்றை வெளியிடுமாறு இலங்கை பொதுச் சேவைகள் தொழிற்சங்கம் தொழில் அமைச்சர் மஹிந்த சமர சிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிதிகளிலிருந்து எவ்வளவு பணம் அரச மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிடம் முதலீடு செய்யப்பட்டுள்ளது, இவற்றிலிருந்து எவ்வளவு பணம் வட்டியாக பெறப்பட்டுள்ளது என்பவற்றை வெளியிடுமாறே சங்கம் அமைச்சரை கேட்டுக் கொண்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் ஜயரத்ன மாலிய கொடை இது குறித்து தெரிவிக்கையில்; இந்நிதிகளைப் பொதுத்துறையில் முதலீடு செய்யுமாறு 1980 ஆம் ஆண்டிலிருந்தே தனியார் துறையினர் கோரிவந்துள்ளனர்.

ஆனால் அதனை தொழிற்சங்கங்களே எதிர்த்து வந்தன பின்னர் மத்திய வங்கி இந்நிதியில் 4 பில்லியன் ரூபாவை பொது நிறுவனங்களில் முதலீடு செய்திருந்தது.

சேமலாப நிதியும் நம்பிக்கை நிதியும் ஆரம்பத்தில் தொழில் அமைச்சின் பெறுப்பில் இருந்தன. ஆனால் ஊழியர் நம்பிக்கை நிதி இப்பொழுது நிதியமைச்சின் பொறுப்பில் உள்ளது. சேமலாப நிதி மத்திய வங்கியின் பொறுப்பிலுள்ளது. இதனால் நம்பிக்கை நிதியின் இன்றைய நிலைபற்றி பொது மக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்படி நிதிகளை தனியார் துறை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு இரகசியமான திட்டமொன்றை வகுத்துச் செயற் படுத்தவுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

ரூபா. 250 பில்லியன் ரூபாவை தனியார் துறையில் முதலீடு செய்யும்படி கேட்டு தனியார் துறையினர் அரசாங்கத்தை நச்சரித்து வருவதாக அறியப்படுவதால் இது தொடர்பாக தொழில்அமைச்சர் அறிக்கையொன்றை வெளியிட வேண்டுமென்று சங்கம் கோரியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## ஆட்சேபம்

(கொழும்பு)

கொத்தணி பஸ் கம்பனிகளை தனியார் மயமாக்கும் அரச நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக் குழுவின் தீர்மானங்களை தொழிற் சங்கக் கூட்டு முன்னணி ஆட்சேபித்துள்ளது.

யூன் 18 ஆம் திகதி மத்திய போக்குவரத்துச் சபையின் தொழிற் சங்கங்கள் கூடி ன்ள்னணி யொன்றை அமைத்துளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மெய்வன்மைப் போட்டி

யா/ சன்மார்க்க மகாவித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி·ப1.30 மணிக்கு வண்ணை வெங்கடேசப்பெருமாள் ஆலய வீதியில் அதிபர் து. நடராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் பி. செந்தில் நந்தனனும், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக்கல்வி அதிகாரி ஏ. இராஜகோபாலும் கௌரவ விருந்தினராக சமூக சேவையாளர் பா. பாலசுப்பிரமணியமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## திருமுறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தால் நடாத்தப்படும் பாடசாலை மட்ட திருமுறைப் பரீட்சை ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கோட்டங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மாணவர்களிடையே இடம்பெறவுள்ளது.

விண்ணப்பப் படிவங்களினை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் ஊடாக கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும், இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து அனுப்பப்பட வேண்டுமெனவும் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-19)

## கண்டனப் பேரணிக்கு பல்கலை ஊழியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று இடம்பெறவுள்ள மக்கள் பேரணிக்கு, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. (உ)

## பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தற்போது கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் பலாலி ஆசிரியர் கலாசாலையைச் சேர்த்த ஆசிரிய மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் எதிர்வரும் சனிக்கிழமை கலாசாலைக்குச்சமுகமளிக்குமாறு அதிபர் கு.சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார்.

பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரிய மாணவர்கள் சமுகமளிக்கத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார். (உ)

அறிகொன்று அறியான்
எனினும்
உறுதி உழையிருந்தான்
கூறல்கடன்
குறள்

# வலம்புரி

## சமாதானப் பேரணி

விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் வேலணைத் தீவகத்தில் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், சமாதானத்தை வலியுறுத்தியும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இன்று சமாதானப் பேரணியை நடத்தவுள்ளது.

ஒரு காலத்தில் அரசின் அடாவடித்தனங்களுக் கு எதிராகவும், பொது மக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும் தமிழ்ப் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடந்தன. ஆனால் இன்று நடைபெறும் பேரணி சமாதானத்தை வலியுறுத்துவதாக - சமாதானத்தைக் குழப்பும் முயற்சிகளைக் கண்டிப்பதாக அமைகிறது.

அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த போதிலும் விடுதலைப் புலிகளுடன் அரசு இணங்கிக் கொண்ட விடயங்கள் பல இன்னமும் நிறைவேற்றப் படாத நிலையிலேயேயுள்ளது. இத்தகையதோர் சூழ்நிலையில் சமாதானத்தைக் குழப்பும் நோக்குடன் இடம்பெற்ற தீவகச் சம்பவம் வேதனைக்குரியது. இருபது வருடகால யுத்தத்தால் நாடு அழிந்து கொண்டிருக்கும் போது அரச படையில் இருக்கும் ஒவ்வொருவரும் பொறுப்போடு நடந்து கொள்வது அவசியமாகும்.

அவ்வகையில் இன்று வெகுஜன அமைப்புகள் நடத்துகின்ற சமாதானப் பேரணிக்கு படைத்தரப்பினர் பூரண ஒத்துழைப்பை வழங்குவது மிக மிக அவசியமாகும்.

இன்றைய சமாதானப் பேரணி சமாதானத்தை வலியுறுத்துவதாக இருப்பதால் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் நடத்திய அகிம்சை வழிப் போராட்டங்களை கொச்சைப்படுத்தியது போல் இல்லாமல் இன்று நடைபெறுகின்ற சமாதானப் பேரணிக்கு உரிய மதிப்புக் கொடுத்து ஐ.தே முன்னணி அரசு சமாதான முயற்சியை விரைவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு சமாதான முயற்சியை விரைவுபடுத்துவதன் மூலம் தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்க. தடுக்க முடியும் என்பதுடன் அரசின் சமாதான முயற்சிகளைக் குழப்பாதிருக்க படை அதிகாரிகள் இறுக்கமான கட்டுப்பாடுகளை தமதுபடையினருக்குப் பிறப்பிக்க வேண்டும்.

# மகாஜனாக் கல்லூரி மலர்வதற்கு வித்திட்டவர்

# மதிநுட்பம்மிக்க பாவலர் துரையப்பாபிள்ளை

## மறைந்தார் மாண்பு

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையில் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இருபதாம் நாள் கச்சேரி முதலியார் அருளம்பலம்தம்பதிகளுக்கு அருந்தவப்புதல்வராகத் துரையப்பா பிள்ளை தோன்றினார். இவரது இளமைக் கல்வியை மிசனரிமாரால் நடத்தப்பட்ட தமிழ்ப் பாடசாலையிலும் பின் செல்லப்பா என்பவரால் நடத்தப்பட்ட ஆங்கில ஆரம்பப் பாடசாலையிலும் கற்றார்.

மதி நுட்பம்

இக் காலத்தில் அருமைத் தந்தையார் பிரிந்தார். தாயார் தந்தையும் தாயுமானார். இக்காலத்தில் உயர் கல்வி கற்க யாழ்ப்பாணக் கல்லூரி ஒன்றுதான் உண்டு. பிள்ளை அங்கே சேர்ந்து கல்வி பயின்றார். இவரது திறமை அதிபர்,ஆசிரியர்கள் யாவரையும் கவர்ந்தது. மதிநுட்பம் பாராட்டப்பட்டது. இவர் பத்தொன்பதாவது வயதில் கேம்பிரிஜ் சர்வகலாசாலை உயர்தரப்பள்ளி இறுதித் தேர்வில் ஆங்கில பாடங்களில் விசேட புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தார். பின் அரசாங்கக் கணக்காளராக கடமை புரிந்தார்.

ஆசிரியப் பணி

பிள்ளையவர்களின் சாதுரியத்தைக் கண்ட அறிஞர்கள் சிலர் இவரை ஆசிரியத்தொழிலில் ஈடுபடுத்த விரும்பினர். பாணந்துறையில் அர்ச்யோவான் கல்லூரியில் ஆசிரியராக இரு ஆண்டுகள் கடமையாற்றி நல்லாசிரியர் என்ற பெயர் பெற்றார். 1894 ல் பாரதம் சென்று பம்பாய் மாகாணத்தில் கோவாப்பூர் உயர் நிலைப் பள்ளியில் இரு ஆண்டுகளும், பின்பெல்காம் உயர் நிலைப் பள்ளியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1898ல்ஏற்பட்டகொள்ளை நோய் காரணமாக இவரது அன்புத் தாயாரின் அழைப்பிற்கிணங்கி இலங்கை வந்தார்.

சைவரானார்

1899 ல் ஆங்கில ஆசிரிய தராதரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தபின் பாதிரி வளவில் அமைக்கப்பட்ட ஆரம்ப பாடசாலையில் (மிசனரி) தலைமையாசிரியர் பதவி வகித்தார். பின் தெல்லி. உயர் நிலைப் பள்ளியில் தலைமைப்பதவி வகித்தார். இக்காலத்தில் கல்விமான்கள் பலருடனும், குறிப்பாக பிரம்ம ஸ்ரீ சிவானந்தையர், முத்துக் குமார சுவாமிக் குருக்கள் ஆகியோருடனும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பிள்ளை அவர்கள் சைவரானார். மிசனரிமாருடன் மனவேற்றுமை ஏற்பட்டது. பாதிரிமார். தொடர்பு விடப்பட்டது.

மகாஜனா உயர்நிலைப் பள்ளி உதயமாயிற்று பல எதிர்ப்புக்களின் மத்தியில் தனித்து நின்று வெற்றி கண்டார். எட்டாண்டுகாலம் அரசினர் அங்கீகாரம் கிடைக்கவில்லை. மாணவர் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை. யாழ்ப்பாணக் கல்வி மான்கள் கொண்ட பரீட்சைக் குழு ஒன்று அமைத்துப் பரீட்சை நடத்திச் சான்றிதழ் வழங்கினார். 1910-1918வரை ஆசிரியர்கள் இலவசமாகக் கல்வி கற்பித்தனர். இவரது விடா முயற்சியால் 1918-ல் அரசினர் அங்கீகாரம் கிடைத்தது. அருகே சரசுவதிஆரம்ப பாடசாலை நிறுவப்பட்டது. இருபது ஆண்டுகளின் பின் இது கல்லூரியுடன் இணைக்கப்பட்டது.

மகாஜனாக்கல்லூரி

பாவலர் நிறுவிய கல்லூரி தான் பின் வளர்ந்து பெரிய விருட்சமாகிமகாஜனாக் கல்லூரி என்ற பெயருடன் பெருமை பெற்றுத் திகழ்கின்றது.

பிள்ளையவர்கள் நல்லாசிரியர் ஆங்கில இலக்கண இலக்கியம் கற்பிப்பதில் ஈடுஇணையற்றவர். ஒழுங்கை நிலை நாட்டுவதில் கண்டிப்பானவர். கல்வியும்ஒழுக்கமும்வளர வேண்டும் என்ற பெரு நோக்குடன் உழைத்தவர் நாட்டுப் பற்று,தமிழ்ப்பற்று. சைவப் பற்று உள்ளவர் கைமாறு கருதாமல் மாணவர்களுக்கு வீட்டில் கல்விகற்பித்தவர்.

தேசபக்தியுள்ள இவர் சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர். கவிதைபுனைவார், கட்டுரை வரைவார். சொன்மாரிபொழிவார், இவரது கும்மிப்பாடல்களையும் கீர்த்தனைகளையும் பதங்களையும்மக்கள்மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். எமது கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்பியவர். பாவலரது உயர்ந்த உள்ளம் உலகிற்கு நன்மை செய்தது. அன்னாரின் நினைவு நாள் யூன் 24-ல் கொண்டாடப்பட்டது.

பாவலரின் சிந்தனைச் சோலையில் மலர்ந்த சிலபாக்களை நாம் நினைவிற் கொள்வோம்.

சிவமணிமாலை

தேனே கரும்பின் தெளிவே
சுவைமிகுந்தெள்ளமுதே
தானே தனக்கு நிகராயொ
ளிருந்தயா நிதியே
மானேர் நன்னோக்கிமை
யாளுடனுறை மாணிக்கமே
கோனேயருளுன்னொடு
நான் கலக்குங்
கொடையெனக்கே.

கமம்

நீர்மெத்த வுள்ளநிலாவரை
தன்னை
நிலைபெறு நல்ல ஒழுங்கு
செய்து
பார்மெச்சு இந்த
நன்னாட்டை
நீர்ப்பாய்ச்சுதல்
பண்பல்லவோ சொல்லு
சங்கமின்னே

தாய்மொழி

செந்தமிழ்சற்று மறியாத
வாங்கிலர்
சீர்மையிருந்திங்கு வந்தவர்
போல்
நந்தமிழர் சிலர் செந்தமிழ்
பேசிட
நாணுகிறாரடிசங்கமின்னே

துர்வழக்கம்

ஆடுகோழிவெட்டுந் துர்
வழக்கம்—பல
ஆலயங்களிலேமி குமுழக்கம்
ஈடில்லாவக்கொடுங்
கொலைப்பழக்கம்-
செய்யும்
ஈனர்க்குண்டோசைவமெய்
விளக்கம்.

★

வே. தனபாலசிங்கம்

## சாயி அருளமுதம்



காயத்திரியை ஒருபோதும் விட்டுவிட வேண்டாம் வேறெந்த மந்திரத்தையும் நீங்கள் கைவிடலாம். அல்லது அசட்டை செய்யலாம்; ஆனால் காயத்திரியைத் தினமும் சில தடவைகளாவது நீங்கள் செபிக்க வேண்டும். நீங்கள் பிரயாணம் செய்யும் பொழுதோ, வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுதோ, வீட்டிலிருக்கும் பொழுதோ எங்கிருந்தாலும் தீங்கிலிருந்து உங்களை அது பாதுகாக்கும். இம் மந்திரத்தில் எழும் அலைகளை மேலை நாட்டினர் ஆராய்ச்சி செய்து வேதத்தில் கூறப்பட்டிருக்கும் அசை அழுத்தங்களுடன் இது ஓதப்படும் பொழுது சுற்றிலுமுள்ள பவனம் கண்களுக்குப் புலப்படக் கூடிய வகையில் ஒளி பெறுவதாகக் கண்டு பிடித்துள்ளனர். ஆகவே, இம்மந்திரத்தை நீங்கள் உச்சாடனம் செய்யும் பொழுது ''பிரம்மப் பிரகாசம்'' எனப்படும் பிரம்மாவின் ஒளியானது உங்கள் மீது பரவி உங்கள் புத்திக்கு ஒளியூட்டி பாதையைப் பிரகாசமடையச் செய்யும். அன்னையாகவும் சக்தியாகவும் எல்லா உயிர்களையும், தாங்கி நிற்கின்ற அன்ன பூரணியே காயத்திரியாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## இடம்பெயர்ந்தோர் பற்றிய மதிப்பீடு அடுத்த மாதம் நடுப்பகுதியில்பூர்த்தியாகும்

(கொழும்பு)

நாட்டின் போர் அனர்த்தம் காரணமாக புலம் பெயர்ந்தோர் இடம் பெயர்ந்தோர் மதிப்பீடு அடுத்த மாத நடுப் பகுதியில் பூர்த்தி செய்யப்படும்என புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில்இருந்து இடம் பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளோரை உள்ளடக்கியவாறு இந்த மதிப்பீட்டு விபரம் வெளிவரவுள்ளது.

மன்னார் மாவட்ட மதிப்பீடுகளின்படி12ஆயிரத்து175 குடும்பங்களை சேர்ந்தசுமார் 50 ஆயிரம் பேர் நலன்புரி முகாம்களிலும்உறவினர் வீடுகளிலும் வசித்து வருவதாக அமைச்சர்தெரிவித்துள்ளார்.

(உ—8)

## தென்பகுதி மாணவர்கள் சமாதான யாத்திரை

### யாழில் நட்புறவு நிகழ்வுகள்

(கொழும்பு)

தென்பகுதி மாணவர்கள் வட பகுதிக்கான சமாதான யாத்திரை ஒன்றினை யூலை மாதம் 2 ஆம்திகதி ஆரம்பிக்கவுள்ளனர்.

காலியில் இருந்து ஆரம்பமாகும்இந்த யாத்திரை காலி, கண்டி,தம்புல்ல,அநுராதபுரம் வவுனியா ஊடாக 5ஆம்திகதி யாழ்ப்பாணத்தை வந்தடையவுள்ளது.

இவர்கள் யூலை 6,7 ஆம் திகதிகளில் யாழ். குடாநாட்டில் நட்புறவு நிகழ்ச்சிகளை நடத்தி சகோதர மாணவர்களுக்கு பாடசாலைஉபகரணங்களை வழங்கவுள்ளதாக தெரியவருகின்றது. (உ-9)

## தனியார் பஸ் கட்டண அதிகரிப்பு யூலை முதல்

(கொழும்பு)

தனியார் பஸ்கட்டணங்கள் யூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படுமென போக்குவரத்து அமைச்சர் உபாலிபியசோம அறிவித்துள்ளார்.

தனியார்பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டாலும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது.எனவும் ரயில் கட்டணங்களிலும் அதிகரிப்பு இடம்பெறாது எனவும்உபாலி பியசோம தெரிவித்துள்ளார்.

3,4ரூபாவிற்கு மேற்பட்ட கட்டணங்களுக்கே 15வீதஅதிகரிப்பு இடம் பெறவுள்ளது.

(உ-9)

**வரவேற்பு உபசாரம்**

இன்று இல்லறம் புகும்
திரு, திருமதி
மாயாகரன்(கரன்)
சுகந்தி (சுகா)
தம்பதிகளின் திருமண வரவேற்புபசாரம் 30.06.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

*மணமக்களின் பெற்றோர்*

உலக கால் பந்துப் போட்டி

# இறுதி ஆட்டத்திற்கு பிறேசில் தெரிவு

உலக கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் விளையாட பிரேஸில் அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று யப்பானிலுள்ள சைத்தமா மைதானத்தில் பிரேசிலுக்கும் துருக்கிக்கும் இடையில் நடந்த அரையிறுதி ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வெற்றிவாகை சூடியது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் ஆட்டத்தின் பாதி நேரம் வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

49 நிமிடத்தில் பிரேஸில் வீரர் ரொனால்டோ அணியின் வெற்றிக் கோலைப் போட்டார். இக் கோலுடன் 6 கோல்களைப் போட்டு அதிக கோல் அடித்த வீரர் என்ற சிறப்பை ரொனால்டோ பெறுகின்றார். எனினும் அதிக கோல் அடிப்பவருக்கு கிடைக்கவுள்ள தங்கக் காலணி யாருக்கு என்பதை இறுதிப் போட்டிவரை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இறுதிப் போட்டியில் பங்குபற்ற உள்ள ஜேர்மன், பிரேஸில் ஆகிய இரு அணிகளும் 7வது முறையாக இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன. நான்கு முறை பிரேசிலும் மூன்று முறை ஜேர்மனியும் கோப்பையை வென்றுள்ளன. ஜேர்மனிக்கும் பிரேஸிலுக்கும் இடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் 30ம் திகதி யப்பானில் உள்ள யோகோகாமா மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

**புலிகளின்...**

பாட்டில் முகமாலை கண்டல் பகுதியில் படையினர் பதினேழு காவலரண்களையும், அகழிகளையும் அமைத்துள்ளமையை வரை படத்துடன் சமர்ப்பித்திருந்தார்.

இதனை அடுத்து புலிகளின் கண்காணிப்புக்குழுத் தொடர்பாளரும், யாழ் மாவட்டக் கண்காணிப்புக்குழு உறுப்பினரும் அவ்விடங்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.(ம)

**சுயாதீன...**

களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

எனினும் இச் சுயாதீன விசாரணைக்குழுவில் ஓய்வு பெற்ற நீதியரசருடன், ஓய்வு பெற்ற படைஅதிகாரி ஒருவரும் விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலி உறுப்பினர் அல்லாத ஒருவரும் இடம்பெறவுள்ளதாக பிரதமரின் சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

இக் குழு விசாரணைகளை மேற்கொண்டு 14நாட்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது. (வ)

**வேலையாட்கள் தேவை**

உடைந்த போத்தல்கள் சுத்தம் செய்வதற்கு
பெண்கள் தேவை
விரும்புவோர் நேரில் வரவும்.

**பாலன் இரும்பு வாணிபம்**
இல 256, கஸ்தூரியார் வீதி
கன்னாதிட்டிச் சந்தி (மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம் T.P- 021 – 2525
குறிப்பு :- யாழ் நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
[C/4534]

**விற்பனையாகிறது**

- G.C.E. (A/L) - பொருளியல்
  1997 - 2002 Part - I & II
  கடந்தகால பல்தேர்வு வினாக்களின் அலகு ரீதியான தொகுப்பு
  க.கலாகரன் BBA *(Hons)* Dip. in Edu. *(merit)*
  இந்துக் கல்லூரி, கொழும்பு –04 ரூ.125/=
- நிருத்தியம்
  பரதகலா வித்தகர்
  மீரா மங்களேஸ்வரன் ரூ.200/=
- தமிழ் இலக்கிய வரலாறு
  வி.செல்வநாயகம். M.A

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
T.P - 2573
[C/4535]

**வீடு வாடகைக்குத் தேவை**

பான்சி பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்திற்கு களஞ்சியமாகப் பயன்படுத்துவதற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வசதியான வீடு தேவை. வீடு வாடகைக்கு கொடுக்க விரும்புவோர் வீட்டின் விபரம், வாடகை ஆகிய விபரங்களுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
விளம்பர இல - 270
மே/பா, வலம்புரி
யாழ்ப்பாணம். (5490)

**இலவச கணனிப் பயிற்சி நெறி**

இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.

பதிவாளர்.
இல.07,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

APPLICATION FORM
Full Name :-..........................
Address :-..........................
Date of Birth:-..........................
Select Course:-..........................
Date. Signature Of Applicant

பயிற்சி ஆரம்பம்
29.06.2002(11.00am)
06.07.2002(3.00pm)

Diploma in Microsoft Office
- Introduction to Computer
- MS Word XP
- MS Excel XP
- MS Access XP
- MS Outlook XP
- MS Power point XP
- Photo Draw XP

Diploma in Computer Programming
- Introduction to Computer
- MS Windows XP
- Programming Techniques
- MS Word XP
- MS Access XP
- Visual Basic
- C++
- E-Mail &Internet
- HTML Programming

Certificate Courses
- MS Word XP
- MS Excel XP
- MS Access XP
- Auto CAD
- Visual Basic
- Visual FoxPro
- Corel Draw

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA

Head Office.
No.11/10B, Stanley Road,
Jaffna.

Branch.
No.07, Palaly Road,
Jaffna.

**புது மணத் தம்பதிகளுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்**

மங்கலகரமான இன்றைய நன்நாளில்
இல்லறம் எனும் நல்லறம் தனில் இணையும்

மணமகன் **கணேசலிங்கம்**
மணமகள் **பிறேமலதா**

தம்பதிகள் சர்வநலனும் பெற்று இறைவனின் திருவருள் துணைகொண்டு நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
சித்தப்பா, தம்பிமார்
அத்தை க. சிவகாந்தலெட்சுமி
மண்டைதீவு.

**புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பிதழ்**

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 13ம் நாள் இன்று(27 .06.2002) வியாழக்கிழமை (ப.நே) காலை 10.27 மணி தொடக்கம் 11.18 வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் சிறி நதியா நகைமாளிகை, சிறி ரூபா நகை மாளிகையின் இணை நிறுவனம்



**சானுபா நகை மாளிகை**

எனும் புதிய தங்க நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணை கொண்டு திறப்பு விழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் தங்கள் குடும்ப சகிதமாக வருகைதந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பிதழை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

இல.1/2, சானுபா நகை மாளிகை
சிறி நதியா கட்டிடம்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்: நடராஜா சத்தியரூபன்
சிறி நதியா நகை மாளிகை,
சிறி நதியா கட்டிடம்
இல. 1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
[C/4527]

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம.

**புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பிதழ்**

அன்புடையீர்

நிகழும் மங்கள கரமானசித்திரபானு வருஷம் ஆனி மாதம் 13ம் நாள் இன்று (27 .06.2002) வியாழக்கிழமை (ப.நே) காலை 10.27 மணி தொடக்கம் 11.18 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் ,

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற



**விதுர்ஷிகா நகையகம்**

என்னும் புதிய தங்க நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணை கொண்டு திறப்புவிழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், உறவினர்கள், வாடிக் கையாளர்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

1/5B கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்
என். யோகேஸ்வரன்
விதுர்ஷிகா நகையகம்
[C/4530]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.